**/நினைவூட்டல்–1/**

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3198/ஆ1/2022 நாள் 08.09.2022

---

பொருள் : பள்ளிக் கல்வி – 2022 – 2023ம் ஆண்டுக்கான INSPIRE AWARD புத்தாக்க மானக் அறிவியல் ஆய்வு விருதிற்கு இணைய தள மூலம் விண்ணப்பிக்க கோருதல் – சார்பு

பார்வை : செயல் இயக்குநர் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் கடித எண்.3335/P1/2022 நாள் 22.08.2020

---

பார்வையில் காணும் செயல் இயக்குநர் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் கடிதப்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு / நிதியுதவி / மெட்ரிக் / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள் 2022 – 2023ம் ஆண்டிற்குரிய INSPIRE AWARD புத்தாக்க மானக் அறிவியல் ஆய்வு விருது பெற www.inspireawards-dst.gov.in என்ற இணையதள மூலம் விண்ணப்பிக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் புத்தாக்க மானக் அறிவியல் ஆய்வு விருது பெற விண்ணப்பிக்க செப்டம்பர் 27–ஆம் கடைசி தேதியாக குறிப்பிட்டுள்ளதால் உடனடியாக விண்ணப்பிக்குமாறு மீள அனைத்து வகை அரசு / நிதியுதவி / மெட்ரிக் / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள் / பள்ளி முதல்வர்கள் /
அரசு / நிதியுதவி / மெட்ரிக் / நடுநிலை /
உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   வேலூர். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு).